செ.வெ.எண்: 696 நாள்: 27.10.2020

**தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் ஆண், பெண் இருபாலருக்கும் நேரடி சேர்க்கை (Spot Admission) நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப அவர்கள் தகவல்.**

தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 50% காலி இடங்கள் பல்வேறு தொழிற் பிரிவுகளில் உள்ளது. ஆதனை நேரடி சேர்க்கை மூலமாக (Spot Admission) 23.10.20 முதல் 31.10.20 வரை பயிற்சியாளர்கள் சேர்க்கப்படவுள்ளனர். 10ம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 14 வயது நிரம்பிய ஆண், பெண் அனைவரும் பயிற்சியில் சேரலாம் மகளிருக்கு கணினி பயிற்சி (COPA) மற்றும் டெக்னிசியன் மெக்கட்ரானிக்ஸ் தொழிற் பிரிவுகள் உள்ளன. மகளிருக்கு வயது வரம்பு இல்லை.

* 8-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (இரண்டு (அ) ஏதேனும் ஒன்று )
* சாதி சான்றிதழ் அசல் / ஆதார் அட்டை நகல் / நான்கு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ /

ஏடி எம் கார்டு (கல்வி கட்டணம் செலுத்துவதற்கு )

ஊடனடி வேலைவாய்புகள் கிடைத்திடும் பல்வேறு தொழிற்பிரிவுகளில் உள்ள காலியிடங்களில் சேர்ந்து பயன் பெறுமாறு மாணவ/மாணவிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேரும் மாணவ மாணவியருக்கு பேருந்து பயணச்சலுகை அட்டை, மாதாந்திர உதவித்தொகை ரூ 500/- தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி மிதிவண்டி, சீருடைகள், பாடப்புத்தகங்கள், வரைபடக்கருவிகள் போன்றவையும் இலவசமாக வழங்கப்படும்,இந்த அரிய வாய்ப்பினை தவறாது பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்வு அலுவலர் தஞ்சாவூர்.